**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 22-08-2024

SC.32/2023

அ.சா. - 3 மல்லையா

2024 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ம் நாள் மல்லையா என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திருமதி. சு. ஸ்ரீவித்யா, பி.காம். எம்.ஏ.பி.எல்., சார்பு நதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மல்லையா | தந்தை பெயர் | லட்சுமைய்யா |
| வயது | 48 | கிராமம் | கிருஷ்ணம்மாகொத்தூர் |
| தாலுக்கா | ஓசூர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**முதல் விசாரணை**

நான் கிருஷ்ணம்மாகொத்தூர் மற்றும் ஓசூரில் வசித்துக்கொண்டு விவசாயம் மற்றும் காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 11-07-2021ம் தேதி காலை 8.30 மணியளவில் நானும் என்னுடைய சகோதரரின் மகன் உள்ளிட்டோர் எனக்கு சொந்தமான இடத்தில் விவசாயம் செய்துக்கொண்டிருந்தோம். அப்பொழுது என்னுடைய அண்ணனின் என்னை கொலை செய்கிறார்கள் என்று கத்தும் சத்தம் கேட்டது. அப்பொழுது நானும் என் அண்ணன் மகன் சசிதரும் ஓடினோம். அப்போது என் அண்ணனை அறிவாளால் வெட்டி அவர் கையிலிருந்து இரத்தம் வழிந்துக்கொண்டிருந்தது. சுரேஷ்பாபு கடப்பாறையால் என் அண்ணனின் வயிற்றில் குத்தினார் அப்பொழுது என் அண்ணன் அந்த கடப்பாறையை தடுத்து பிடித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது நான் ஓடி சென்று அந்த கடப்பாறையை பிடித்துக்கொண்டேன். அப்பொழுது சசிதர் அன்னையப்பா கையில் இருந்த அறிவாளை தடுக்க போனார். அப்பொழுது ஆஜர் எதிரி வெங்கடலட்சுமியம்மா சசிதரின் தலையில் அடித்துவிட்டார். அன்னையப்பாவும் சசிதரை அறிவாளால் இடது கையில் வெட்டிவிட்டார். அதில் சசிதருக்கு தலையில் அடிப்பட்டு இரத்தம் வந்தது, கையில் எழும்பு முறிவு ஏற்பட்டது. அங்கு நாங்கள் சத்தம் அதிகமாக கேட்டதால் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஓடிவந்தார்கள் அப்பொழுது ஆஜர் எதிரிகள் கண்டார ஓலி பசங்க எங்க சொத்து நீ வந்த இது பன்ன முடியாது என்னைக்கு இருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் இன்னைக்கு ஆளுங்க இருந்ததால் தப்பிச்சிட்டிங்க இன்னைக்கே உன்னை வந்து முடித்திருப்போம் இன்னைக்கு இல்லாட்டியும் என்னைக்காவது உங்களை முடிக்காம விடமாட்டோம் என்று கூறிக்கொண்டே அங்கிருந்தே போய்விட்டார்கள். பின்னர் என் அண்ணனையும் சசிதரையும் மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம், என் அண்ணனை நான் ஓசூர் அரசு மருத்துவமனைக்கும் சசிதரை இன்னொரு அண்ணன் மகன் சத்தீஷ் சூளகிரியில் உள்ள விஜய் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். பின்பு என் அண்ணனை அடி பலமாக இருந்ததால்

ஓசூரில் உள்ள குணம் மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்கு சேர்த்தோம். போலீசார் மருத்துவமனைக்கு வந்து என்னையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அதற்கு பின்பும் போலீசார் வந்து விசாரித்தார்கள். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள அறிவாள், கட்டை, கடப்பாறை ஆகியவைகளால் தான் ஆஜர் எதிரிகள் சம்பவ தேதியில் எங்களை தாக்கினார்கள். போலீசார் இது தொடர்பாக விசாரித்தார்கள்.

**வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

R SRIVIDYA

Digitally signed by R SRIVIDYA
Date: 2024.08.22 13:40:44 +0530